1993 ஏப்ரல் 27]

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சென்னை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய முக்கிய நகரங்களில் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், பொதுமக்களுக்கு சமையல் வாயுவை விநியோகம் செய்கிற பணியை செய்து வருகின்றன. மற்ற ஊர்களில் எண்ணெய் நிறுவனங்கள்—ஆயில் கம்பெனிகள்—நம்முடைய கூட்டுறவுகளுக்கு அவர்களுடைய விநியோகத்திலே முன்னுரிமை அளிப்பதில்லை. அப்படி அவர்கள் அளிப்பதாக இருந்தால், தமிழ்நாடு முழுதும் கூட்டுறவு விற்பனை பண்டக சாலைகள் மூலமாகவும், மொத்த விற்பனை கூட்டுறவு பண்டகசாலைகள் மூலமாகவும் நாம் செய்வதற்கு தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 490, திரு. து. மூர்த்தி. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

490—

கூட்டுறவு அங்காடிகளுக்கு கட்டிடங்கள்

*16470—திரு. து. மூர்த்தி :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அத்தியாவசிய பண்டங்கள் விற்பனை செய்யும் கூட்டுறவு அங்காடிகளுக்கு அரசு செலவில் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அத்தியாவசிய பண்டங்கள் விற்பனை செய்யும் கூட்டுறவு அங்காடிகளுக்கு அரசு செலவில் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் அத்தியாவசியப் பண்டங்களை வைத்து விற்பனை செய்யும்போது, பெரும்பாலான இடங்களில் தனியார் கட்டிடங்களில் வைத்து விற்பனை செய்கிறார்கள். தனியார் கட்டிடத்தில் வைத்து விற்பனை செய்தால், விற்பனையாளர்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இஷ்டம்போல் எடுத்துச் செல்வதற்கும் மேலும் களவு போவதற்கும் வாய்ப்பாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அரசாங்கத்திற்கு, வாடகைக் கட்டிடங்களுக்கு வாடகைக் கொடுப்பதால், நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, தனியார் கட்டிடங்களில் வைத்து விற்கப்படாமல், அரசே தனது சொந்தக் கட்டிடங்களில் வைத்து விற்பதால், இஷ்டம்போல் எடுத்துச் செல்வது தவிர்க்கப்படுகிறது; களவு போவதையும் தடுக்கலாம்; ஒரு பாதுகாப்பாக இருக்கிற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, ஏழை எளியவர்களின் இதயத்தில் குடி கொண்டிருக்கும் நமது இதய தெய்வம் டாக்டர் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுடைய அரசில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் திட்டத்தில், நமது பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 10,921 கடைகள் இருக்கின்றன. இதிலே 4,214 கடைகள் இப்போது, கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தமான கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மீதம் இருக்கிற 16,707 கடைகள் வாடகைக் கட்டிடங்கள் இயங்கி வருகின்றன. சொந்தக் கட்டிடமாக இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் வசதியாக இருக்கும். இப்படிப் பட்ட சிறு குறைகளைத் தடுக்க முடியும். ஆனால், இவைகளைக் கட்ட வேண்டுமென்று சொன்னால், 125 கோடி ரூபாய் நமக்குப் பணம் தேவை, அந்த அளவு நிதிவசதி இல்லாத காரணத்தினால், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் இந்தக் கட்டிடங்களைக் கட்டலாம் என்று மாநில திட்டக் குழு பரிந்துரை செய்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 491, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண் 492, திரு. ஜெ. பாலகங்காதரன் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

492—

சிவகாசியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைத்தல்

*11120—திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதியில் மிளகாய் வற்றல் அதிகம் விளைவதால் சிவகாசியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க அரசு முன்வருமா?